சாகாவரம் பெற்ற சிரஞ்சீவி

பல கதைகளைக் கற்று கதைப் பைத்தியமான டுல்சினியா, டெல் டொபாசோ என்று தன்னை பெயரிட்டுக் கொண்டாள். ஆனால் உண்மையில் அவள் பெயர் அல்போன்ஸா, லாரென்ஸா. தன்னை ஒரு இளவரசியாகவும், அழகியாகவும் நினைத்துக் கொண்டு கற்பனையில் மிதந்தாள். இயற்கையில் அவள் ஒரு சாதாரண விவசாயி மகளாகவும் உருவத்தில் நாற்பது வயதைக் கடந்தவளாகவும், முகத்தில் அம்மை வடுக்கள் கொண்டவளாக இருந்தாள். தனக்கு 'டான் க்வீசோட் டி லா மான்சா' என்ற வீரப் பிரதாபங்கள் செய்யும் ஒருவனைக் கனவுக் காதலனாக தேர்ந்தெடுத்தாள். டான் க்வீசோட் வீரச் செயல்களை புரிய பல நாடுகளுக்கு சென்றிருப்பதாகவும், அழகிய பெண்களை காதலித்ததாகவும், அப்படிப்பட்ட கற்பனை வீரன் வருகின்ற திசையை நோக்கி பார்த்துக் கொண்டிருந்தாள் அல்போன்சா. இதை அறிந்த ஆலாசோ க்விஜானோ என்ற அவளை காதலித்த ஒரு வேடிக்கை மனிதன். தான்தான் டான் க்வீசோட் என சொல்லிக் கொண்டு அவளிடம் செல்லலாம் என்று நினைத்தான். பழைய கவசங்களை அணிந்து மட்டக் குதிரையின் மேலேறி டுல்சினியா தன் காதலனிடம் எதிர்பார்த்த நடவடிக்கைகளை செய்வது என்ற எண்ணத்தோடு சென்றான். இந்த முயற்சி வெற்றி அடையும் என்று நம்பி டொபாசோவுக்குச் சென்றான். ஆனால் டுல்சினியா அங்கே இறந்து போனவளாய் நினைத்துக் கொண்டு இருந்தாள். இதுதான் 'டான் க்வீசோட்' கதையின் சாராம்சம்.

'டான் க்விசாட் டி லாமான்சா' என்ற நாவல் ஸ்பெயினில் 1605 - இல் வெளி வந்து நானூறு ஆண்டுகள் ஆவதை ஸ்பெயின் மட்டுமல்லாமல், உலகமே கொண்டாடுகிறது. செர்வாண்மீ எழுதிய இந்நாவல் உலகத்தில் உள்ள அனைவராலும் போற்றப்பட்டு வாசிக்கப்பட்டதாகும். பல மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. க்விசாட்டின் பிரயாணம் இந்நாவல் 2500 கி.மீ. ஆகும். 146 ஊர்களையும், நகரங்களையும் கடக்கும் போது நடக்கின்ற சம்பவங்கள். வேடிக்கையாக, வினோதமாக, அற்புதமாக எளிதில் புரியும் தத்துவமாக நாவலில் சொல்லப்படுகின்றது.

இந்நாவலை சுமார் 60 நகரங்களை சேர்ந்த 100-க்கும் மேலான எழுத்தாளர்கள் எல்லா காலத்திற்கும் ஏற்ற சாகாவரம் பெற்ற, உலகத்தரமான இலக்கிய படைப்பு என்று ஏற்றுக் கொண்டுள்ளனர். அனைத்து தரப்பினராலும் விரும்பி திரும்பத் திரும்ப படிக்கப்படுகிற படைப்பாகும். நம் நாட்டில் தெனாலிராமன் கதைகள், அரேபிய இரவுகள், மதன காமராசன் கதைகளைப் போன்று, மேலை நாட்டில் சாதாரண எளிய மக்களும் விரும்பி வாசிக்கின்ற நாவலாகும்.

கிராமத்தைச் சேர்ந்த ஒருவர் உலகத்தில் நடக்கும் அநீதிகளை தன்னுடைய வீர நடவடிக்கையினால் ஒழிந்திட முற்படுகின்ற நிகழ்ச்சிதான் இந்த நாவலில் குறிப்பிடப்பட்டுள்ளது. டான் க்விசாட்டிடுடன் சாஞ்சோபன்சா இந்த சாகசப் பணிகளுக்கு துணையாக இருக்கின்றார். இந்நாவலின் படைப்பிற்கு பின்புதான் சார்லஸ் டிக்கைன்சன், மார்க் டுவின் போன்ற பல படைப்பாளிகளுக்கு இப்படைப்பு ஊற்றுக்கண்ணாக அமைந்தது மட்டுமல்லாமல், மேற்கத்திய இலக்கியப் படைப்புகளுக்கு அடிப்படை என்றும் சிலர் கூறுகின்றனர்.

இப்படைப்பின் ஆசிரியரான செர்வண்டே ஒரு ஊர் சுற்றிய போர் வீரர். இடது கை பாதிக்கப்பட்டு துருக்கியில் சிறைவாசியாக இருந்தார். அல்ஜீரியாவில் அவனுடைய உரிமைகள் பறிக்கப்பட்டு பல வேதனைகளை சந்தித்தவர். இப்படைப்பு வேடிக்கை, விநோதம், மாயாஜாலம், முட்டாள்தனம், பைத்தியக்காரத்தனம், துன்பவியல், இன்பவியல் என்று அனைத்து சுவைகளும் நிரவப்பட்ட படைப்பாகும். இரண்டு தொகுதிகளான இந்நாவல் அரபு மொழிக்கு தொடர்புடையது என்றும் விவாதங்கள் எழுந்துள்ளன. யூதர்கள் பிரச்னை, இஸ்லாத்தின் மேலாண்மை, கிறிஸ்தவ வளர்ச்சி போன்ற பின்புலத்தில் இந்நாவலின் கருத்துகள் அமைந்துள்ளன என்று ஆராய்ச்சிகள் சொல்கின்றன. டான் க்விசாட்டின் சொந்த ஊரான லாமான்சாவில் அவர் செய்யும் சாகசங்கள் பேபெல் கோபுரத்தை கட்டும் பொழுது ஏற்படும் சர்ச்சைகள், குழப்பங்கள், இறந்தவர்களுடன் தொடர்பு கொள்வது. டான் க்விசாட் காற்றலையுடன் சண்டை போடுவது போன்ற பல்வேறு காட்சிகள், படிக்க படிக்க பரவசம். மட்டுமல்லாமல் பல வகையிலும் சிந்திக்கக்கூடிய பகுதிகளாகும்.

இப்படைப்பை கையில் எடுத்தால் முடியும் வரை மூடி வைக்க முடியாத கதையமைப்பாகும். 400 ஆண்டுகளுக்கு முன்பு வந்த நாவல்கள், இலக்கண, இலக்கிய வடிவங்கள் அறிந்திராத நேரத்தில் படைத்த இந்நாவல் இலக்கிய உலகத்தில் அடிப்படை கூறாக பன்னாட்டு அளவில் நினைக்கப்படுகின்றது.

ஒரு கட்டத்தில் டான் க்விசாட் கேஸ்டல் ஆளுநரிடம்,

"Arms are my only ornament,

My only rest the fight etc"

தன்னுடைய ஒரே ஆபரணம் ஆயுதம்தான். தனக்கு ஓய்வு என்பது சண்டை தான், மேலும் "Your bed will be the solid rock your sleep; to watch all night"

படுக்கை என்பது பாறைகள்தான். உறக்கம் என்பது இரவைப் பார்ப்பதாகும் என்று சொல்லும் கருத்துகள் முரணாகவும் இருக்கின்றன. வேடிக்கையாகவும் இருக்கின்றன. சிந்திக்கக் கூடியவையாகவும் இருக்கின்றனது. இம்மாதிரி கருத்துகள் செர்வண்டோவின், டான்க்விசாட் நாவலில் ஒவ்வொரு பக்கத்திலும் பரந்து விரிந்து வருகின்றது. கு. அழகிரிசாமி, க.நா.சு. போன்ற மூத்த தமிழ் படைப்பாளிகள் இந்நாவலைப் பற்றி பலசமயம் சிலாகித்துள்ளனர்.

ஆதாரம் :- don Quixote - Cervantes

வெளியீடு - Morden Librarian

New yark.

கதை சொல்லி, **ஆகஸ்ட்** 2006